சென்னை கிழக்கு மாவட்டம்,எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மனிதநேயம் – 63 உயர்ந்த கருத்துகள் நிறைந்த அரசியல்! உங்களில் ஒருத்தர் வகுத்த அறம் பொருள்!! எனும் தலைப்பில் 24.4.2025, நேற்று சென்னை சேத்துப்பட்டு மலையாளி கிளப் மகாலில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் பகுதி கழகச் செயலாளர் வி. சுதாகர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் புகழரங்கத்தில் கலைமாமணி ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன், கவிதை மாத இதழ் ஆசிரியர் ராஜ கம்பீரன், கவிஞர் புனித ஜோதி, இதய கீதம் ராமானுஜம் மற்றும் கழகத் தோழர்கள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.எம். யாழினி,சொ. வேலு , கோ ஏகப்பன், கூ.பீ.ஜெயின், எம் சி.,கே. எஸ்.எம்.நாதன், பரிதி இளம் சுருதி.எம்சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி., அ.நிர்மலா தேவி, பாத்திமா முசாபர்.எம் சி., தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன் க.வினோத் மற்றும் கழகத் தோழர்கள் முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் வட்டக் கழகச் செயலாளர் எல்.சுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை ! டி.வி.செம்மொழி தலைமை! சென்னை கிழக்கு மாவட்டம்,

தி.மு.க. நெசவாளர் அணி சார்பில், ஓவியர்கள், புகைப்படக் கலைஞர்களுக்கு நல உதவிகள்!

பூச்சி முருகன் வழங்குகிறார்!

சென்னை,ஏப்.25-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 65, காலத்தை கலையால் பதிவு செய்! கழகத்தை உயிராய் உறுதி செய்!! எனும் தலைப்பில் வில்லிவாக்கம் மேற்கு பகுதியில், மாபெரும் நலத்திட்டம் 26.04.2025 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, அண்ணா நகர் மேற்கு, பள்ளிசாலை பி.எஸ்.பி. ஹாலில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், தலைமை பொதுக்குழு உறுப்பினர், 104வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.வி. செம்மொழி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின் எம்.சி, வே.வாசு, சாவித்திரிவீரராகவன், சுதாதீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், ஆர்.வரதன், லதாவாசு எம்.சி, ஜி.ஜெ.பிரபு, ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, சொ.முருகேசன், ப.லோகுபாபு, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜனனி முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.கே.பி.தீபக்குமார், ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன், ஆர்.கேபாலகிருஷ்ணன், சிட்கோ.ப.சுரேஷ்பாபு, ம.சந்தர்எபி, கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், க.மணிமாறன், எச்.பிரபாகரன், டி.எம்.பாஸ்கரன், பி.சசிபிரகாஷ், மு.ரவிச்சந்திரன், ஜெ.பால சுந்தரம், ஏ.எஸ்.கண்ணன், பா.தமிழ்செல்வன், சே.ராஜாஜி, சி.பத்மநாபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் தலைமை நிலைய செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் பூச்சி முருகன் - ஓவியர்கள், புகைப்பட கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றார்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், பெருநகர சென்னை மேயர் ஆர்.பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் ஓ.ஏ.நாகலிங்கம், கே.எஸ்.இரவிச்சந்திரன் பி.கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு சி.மகேஷ்குமார் சங்கரி நாராயணன் எஸ்.மணிமுடி கே.எஸ்.எம்.நாதன் எம்.விஜயகுமார் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா வே.உமாகாந்த் பரிதிஇளம்சுருதிMC வழக்கறிஞர்இந்திரஜித் காஞ்சி பாஸ்கர்

மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன் புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, மண்டல குழு தலைவர்கள் : சொ.வேலு எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, பகுதி கழக செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன்MC டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன் எம்.சாமிக்கண்ணு V.சுதாகர் எஸ்.முரளி எஸ்.இராஜசேகர். பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி பி.ஜெ.துளசிங்கம் லயன்பி.உதயசங்கர், வி.இரமேஷ்(ஏ)நீலகண்டன் எம்.சி, எம்.இப்ராஹிம்கனி அ.நிர்மலாதேவி டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா.கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஜெ.பாலமுருகன் பா.ஜெகதீஷ் க.வினோத் எஸ்.தனசேகர் ஆர்.டி.சங்கர்நானா நா.துலுக்காணம் எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன் ஜி.தாமோதரன் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி எம்.பெரோஸ்கான் பி.விஜயகுமார் எம்.விநாயகம் ஆர்.எஸ்.சித்திக் ம.அசோக்குமார் க.பா.பிரதீப்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது து.ஆயிரம் இரா.வீரமணி, வில்லிவாக்கம் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் புரசை டி.சம்பத் டி.தாமோதரன் W.அமுல் நா.அறிவுடைநம்பி, வில்லிவாக்கம் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எ.வேதா விக்னேஷ்சீனிவாசன் ச.மனோகரன் கே.பாஸ்கர் சி.தேவராஜ் காஞ்சி.செ.துரை வில்லிவாக்கம் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வி.சபாபதி வ.ரமேஷ்பாபு மு.பரமானந்தம் டி.ஸ்டாலின் ந.குமார் எ.சத்தியநாராயணன் கி.ஜெய்சங்கர் ப.செந்தில்குமார் எஸ்.துரைபாபு கே.ராஜா வி.ஆர்.ஜெயக்குமார், மாவட்ட பிற அணி இணை துணை அமைப்பாளர்கள் எஸ்.எஸ்.மணிகண்டன் ப.மலர்கொடி சிட்கோ.எஸ்.அன்வர்தீன் சாந்திபில்லி ஜி.கே.வெங்கட் வழக்கறிஞர் பி.கோபிலதா வழக்கறிஞர் ஜெ.சரவணன் வழக்கறிஞர் மா.முரளிவினோத் ஓசோன்மனோகரன் பொறியாளார் எம்.எஸ்.ரமேஷ் டாக்டர்.எம்.ஜி.திவ்யானந்தன் ஸ்டண்டு வி.புஷ்பராஜ் ஜிம்.முரளி[எ]சையத் டி.பாஸ்கரன் ச.காளிதாசன் சிட்கோ த.விஜயகுமார் கே.தங்கவேல்ராஜன் டி.சையத்நியமத்துல்லா செங்கைசண்முகம் ஆ.சுரேஷ்குமார் வழக்கறிஞர் எம்.குணசேகரன் என்.எஸ்.விஜயகுமார் வழக்கறிஞர்கே.சுப்பிரமணி பி.ஜெயந்தி உ.பிரசன்னவேலன் வழக்கறிஞர் பா.சுந்தர் கா.யுவராணி கே.ஜி.அய்யாதுரை ஆர்.ராஜசேகர் ஜிம்.என்.மோகன்குமார் வி.ராஜமாணிக்கம் ஓம்.புரசை சேகர் சா.அருண்குமார் ராபர்ட் ராஜன் எம்.விஜயகுமார் க.பிரகதீஸ்வர் கே.பி.சரவணன், ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் கே.எஸ்.பாபு, சு.பாண்டிதுரை நன்றி கூறுகிறார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா சு. வேலுசாமி

ஏப்ரல் 25 (2018)

தனது இளமைப் பருவம் காலந்தொட்டே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கோவை மாவட்டம், தடாகம் ஊராட்சியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழக சீரணிப் படையிலும், பின்னர் தடாகம் கிளைக் கழகச் செயலாளராகவும், கிளை அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட 'நீதிகேட்டு நெடிய பயணத்தில்' அவருடன் கலந்து கொண்டவர்.

மிசா சட்டத்தின் கீழும் – சட்டநகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ரூ. 67 கோடியில் சாலை விரிவாக்கம்

சிறுவாபுரி முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும்!

சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு தகவல்!

சென்னை,ஏப்.25- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (24.04.2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன் எழுப்பிய வினாக்க ளுக்கு பதிலளித்தார்.

துரை.சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சட்டமன்ற தொகுதி சின்னம்பேடு, சிறுவாபுரி, அருள்மிகு பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் சிறப்பு திட்டம் ஏதாவது செயல்படுத்தப்படுமா?

அமைச்சர் பி.கே. சேகர் பாபு : சிறுவாபுரி முருகன் திருக்கோயிலானது பல்வேறு வகையில் பக்தர்களுடைய நேர்த்திக்கடனுக்கு பரிகாரம் காணுகின்ற ஒரு ஸ்தலமாக விளங்குகின்றது. இத்திருக்கோயிலுக்கு செவ்வாய்க்கிழமைகளில் குறைந்தபட்சம் 50,000 பக்தர்களும், வார இறுதி நாட்களில் 10,000க்கும் மேற்பட்ட பக்தர்களும், மற்ற நாட்களில் 1000த்திலிருந்து 2000 பேர்கள் பக்தர்கள் அந்த திருக்கோவிலுக்கு வருகின்றனர். ஆகவே இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 2022 ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபாயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுற்றிருந்தன. தற்போது ரூ.16.50 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வரைவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்கோயில் திருக்குளம் ரூ.3 கோடியில் சீரமைக்கப்பட்டுள்ளதோடு, பக்தர்களுக்காக ரூ.38 லட்சம் செலவில் கழிப்பிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ரூ.22.90 லட்சம் செலவில் அர்ச்சகர் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு ள்ளது. இதோடு மட்டுமல்லாமல் சிறுவாபுரி திருக்கோயிலுக்கு மாற்று வழி பாதை அமைத்திட வேண்டும் என அந்த மாவட்ட அமைச்சர் நாசர் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்கள் டி.ஜே.கோவிந்தராஜ், துரை சந்திரசேகர் ஆகியோரின் கோரிக்கையை ஏற்று நானும், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாக ஆய்வு செய்து முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் அதற்கு ரூ.67 கோடியை அரசு நிதியாக வழங்கி அந்த சாலையை விரிவாக்கு வதற்கும் தமிழக முதல்வர் உத்தரவிட்டிருக்கின்றார். அந்த திருக்கோயிலில் இந்த ஆண்டு இலவச மருத்துவ மையத்தையும் கொண்டு வந்திருக்கின்றோம். ஆகவே இந்த ஆண்டு இறுதிக்குள் பக்தர்களுடைய தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

துரை.சந்திரசேகரன் : ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கை குறிப்போடு இந்தியாவிற்கே ஆன்மிக அரசியலின் முன்னோடியாக இருக்கின்ற தமிழக அரசை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வெகுவாக பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். அதேபோல சிறுவாபுரி திருக்கோயில் நடைபெறுகின்ற பணிகளையும் சேர்த்து எப்போது இந்த பணிகள் முடிவு வரும் என்பதையும், அதே திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கின்ற திருத்தணி முருகன் கோயிலுக்கு பக்தர்கள் கூட்டம் அதிகமாக வருகிறார்கள். அவர்களுக்கும் அடிப்படை வசதிகள் தாங்கள் செய்வதற்குரிய திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்பதை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு : தமிழக முதல்வர் பொறுப்பேற்ற பிறகு திருத்தணி அருள்மிகு முருகன் திருக்கோயிலுக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளை சொல்வதென்றால் இந்த நாள் முழுவதும் போதாது என்பதால் ஒரு சில திட்டங்களை மட்டும் பேரவையின் முன்வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன். திருத்தணி அருள்மிகு முருகன் திருக்கோயிலின் தங்கத்தேர் 2014 ஆம் ஆண்டு வரை பிறகும் வெள்ளித்தேர் 2017க்கு பிறகும் பக்தர்கள் பயன்பாட்டில் இல்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இந்த இரண்டு தேர்களையும் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கின்றோம். அதேபோல் தெலுங்கானா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருந்து பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் திருத்தணிக்கு மாற்று வழி அமைப்பதற்காக அரசிடம் வைத்த கோரிக்கை ஏற்று தமிழக முதல்வர் இந்த நிதியாண்டில் ரூ.57.50 கோடியை அரசு மானியமாக வழங்கி அந்த மாற்றுப் பாதையை அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கின்றார். அதோடு மட்டுமில்லாமல் அங்கு தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளி, அன்னதானக்கூடம் என ரூ.183.53 கோடி செலவில் பெருந்திட்ட வரைவினை அந்த திருக்கோயிலில் செயல்படுத்தி வருகிறோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் அந்த திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதான திட்டம், கட்டணமில்லாத மருத்துவ மையம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பக்தர்களின் நலன் கருதி, ரயில்வே நிலையத்திலிருந்து மலைக் கோயிலுக்கு இலவசமாக 2 பேருந்துகளை விடுமுறை மற்றும் திருவிழா நாட்களில் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் இயக்கி வருகிறோம். பக்தர்களுடைய கோரிக்கை அனைத்தும் நிறைவேற்ற ப்பட்டு வரும் காலங்களில் அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவேற்றி தரப்படும் என்ற உத்தரவாதத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

துரை.சந்திரசேகரன் : தமிழ் கடவுள் என்று சொல்லப்படுகின்ற சாதி மறுப்பு திருமணத்தை அன்று அறிவித்து நமக்கு எல்லாம் விட்டுச்சென்ற முருகனின் அறுபடை வீடு திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளை போல அறுபடை வீடு இல்லாத பிற முருகன் திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகிறதா, அறுபடை வீடு ஆன்மிக பயணத்தில் இது வரை எவ்வளவு பக்தர்கள் பயன் பெற்றனர் என்பதை விவரத்தை அமைச்சர் தெரிவிப்பார்களா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு : திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு இது வரையில் 60 வயதிற்கு மேற்பட்ட 70 வயதிற்குள்ள 2000 மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் அரசு மானியத்தில் இதுவரை அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தை முடித்துள்ளார்கள். இந்த ஆண்டு மானிய கோரிக்கையில், மேலும் 2000 பக்தர்களை ஆன்மிகப் பயணத்திற்கு அழைத்துச் செல்வதற்கும் அனுமதி அளித்துள்ளதோடு அதற்கும் சேர்த்து அரசு நிதியை மானியமாக முதலமைச்சர் ஒதுக்கி இருக்கின்றார்கள்.

இந்த திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு 110 முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. அறுபடைவீடு அல்லாத 143 முருகன் கோயில்களில் ரூ. 284 கோடி மதிப்பீட்டில், 609 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒட்டுமொத்தமாக முருகன் திருக்கோயில்களுக்கு ரூ.1085.63 கோடி மதிப்பீட்டில் 884 திருப்பணிகள் தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட சொல்ல வேண்டும் என்றால் அறுபடை வீடுகள் என்று சொல்லப்படுகின்ற திருச்செந்தூரில் 350 கோடி ரூபாய் செலவிலும், பழனியில் 180 கோடி ரூபாய் செலவிலும், திருப்பரங்குன்றத்தில் ரூ.2.60 கோடி செலவிலும், சுவாமிமலையில் ரூ.3.55 கோடி செலவில் மின்தூக்கி அமைக்கும் பணியும் நம்முடைய பழமுதிர்சோலையில் ரூ.9.10 கோடி செலவில் மலைப்பாதை சீரமைப்பு போன்ற பணிகளும் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் நடைபெற்று வருகின்றன.

தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் கடந்த ஆண்டு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதோடு நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் சுமார் 5 லட்சம் முருக பக்தர்கள் பங்கேற்ற ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வை இந்த திராவிட மாடல் ஆட்சிதான் நடத்தியது என்பதை பதிவு செய்து, முருகன் திருக்கோயில்களுக்கு செய்கின்ற திருப்பணிகள் தொடரும் தொடரும் தொடரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

பாவேந்தர் பிறந்தநாள்: தமிழ் வார விழாவாகக் கொண்டாட்டம்!

முதல்வரின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது!

கவிஞர் பொன்னடியார் அறிக்கை!

சென்னை, ஏப்.25-

"பாவேந்தர் பிறந்தநாளை தமிழ்வார விழாவாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்த முதல்வரின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது" என்று கவிஞர் பொன்னடியார் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் தமிழ் வார விழாவாகக் கொண்டாடப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பாகும்.

அப்பெருமகனின் தந்தையார் கலைஞர் அவர்கள், அவரின் இளமைக் காலந்தொட்டு பாவேந்தரின் புகழை பல்வேறு வழிகளில் பரப்பியவர். தமிழக முதல்வராக அவர் இருந்தபோது 1990-ஆம் ஆண்டு பாவேந்தர் படைப்புகளை அரசுடைமையாக்கி தமிழ் நெஞ்சங்களின் வாழ்த்துகளைப் பெற்றவர்.

அன்னாரின் வழியில் பாவேந்தரின் புகழ் போற்றும் முதல்வரின் தமிழ் வார விழா கொண்டாட்ட அறிவிப்புக்கு தமிழ் மக்களுடன் சேர்ந்து தமிழக கவிஞர் பெருமன்றமும் நன்றி கூறி வணங்குகிறது.

இவ்வாறு கவிஞர் பொன்னடியார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் – சட்டப்பேரவையில் அறிவித்த

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் வரவேற்பு !

மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை ஏப்:25

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை வருமாறு;

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் மாற்றுத் திறனாளிகள் என்ற துறையை உருவாக்கி லட்சக்கணக்கான மாற்றுத் திறனாளி களுக்கு இன்று தொடக்க கல்வி முதல் உயர் கல்வி வரை பயிலக்கூடிய வாய்ப்பையும் தந்து கல்விக் கட்டணம் ரத்து,சிறப்பு கட்டணம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை மாற்றுத்திறனாளிகளுக்கு அறிவித்து இன்று சுயமரியாதையோடு சமூகத்தில் அனைத்து மாற்றுத்திறனாளிகளும் கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேறியுள்ளதற்கு தலைவர் கலைஞரின் பொற்கால ஆட்சியே காரணம் என்பதை இந்த நேரத்தில் நன்றியுணர்வோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

கலைஞர் அவர்கள் 5 முறை முதலமைச்சர் பணி, 13 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்த கலைஞரின் சாதனைகள் எண்ணிலடங்கா. இத்தனை பணிகளுக்கிடையே அவர் எழுத்துப் பணியையும்,நாடகம், திரைப்படம், இலக்கியம்,ஊடகம், சின்னத்திரை, அரசியல் களம் என அவர் தொடாத துறையே இல்லை எனலாம்.

தமிழ்நாட்டில் மற்ற மாநிலங்களை காட்டிலும் கல்வித்துறையில் பல்வேறு சாதனைகள் புரிவதற்கு தலைவர் கலைஞரின் ஆட்சியை காரணம் என்பதற்கு மறுக்க இயலாது. ஆசிரியர் நியமனம் தொடங்கி பள்ளிகள் உள்கட்டமைப்பு வரை பல்வேறு வகையான நலத்திட்டங்களை பள்ளிகளில் செயல்படுத்தி இந்தியாவிற்கு தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்க கலைஞரின் பொற்கால ஆட்சியை காரணமாகும்.

தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் தான் பள்ளிக்கல்வித்துறை, உயர்கல்வித்துறை என இரண்டு துறைகள் உருவாக்கப்பட்டு இன்று தனித்தனி துறைகளாக செயல்பட்டு வருகிறது. கல்வித்துறையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தின் கல்வித் தரம் மிக உயர்ந்த நிலையில் உள்ளது.

சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பெயரில் இந்தியாவிலேயே முதல் முறையாக டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பல்கலைக் கழகம் அமைத்தவரும் கலைஞர் அவர்கள் தான்.

அதுமட்டுமல்லாமல் கல்வி துறையில் பாரதிதாசன் பல்கலைக் கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், ஆசியாவிலேயே முதன் முறையாக கால்நடைப் பல்கலைக்கழகம் ஆகிய உயர் கல்வி நிறுவனங்களை அமைத்துக் கல்விப் புரட்சி செய்ததும் கலைஞரின் மாபெரும் சாதனைகளாகும்.

கலைஞரின் வழித்தோன்றலில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ் நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்தில் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என அறிவித்தமைக்கு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் கோ.வி. செழியன் அவர்களுக்கும் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ரெ. தங்கம் தெரிவித்துள்ளார்